நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மன்னார்குடி.

**முன்னிலை:- திருமதி. ஆ. சீதாலெட்சுமி, எம்.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மன்னார்குடி.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் நாள் செவ்வாய்கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 08-ம் நாள்.

**CNR No.TNTV07- 002534 -2025**

in

**ஆண்டு பட்டியல் வழக்கு எண்**. 252/2025

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 16.07.2025

வழக்கு விசாரணை முடிவுற்ற நாள்: 08.04.2026

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

வடபாதிமங்கலம் காவல் நிலையம்,

குற்ற எண். 03/2025

சட்டப்பிரிவுகள். 296(b), 118(1), 115(2), 351(3) BNS ...குற்றமுறையீட்டாளர்.

/எதிர்/

1) வடிவழகன், வயது. 24/25,

த/பெ. செல்லப்பா,

ஆண்டிகுல தெரு, மாயனூர்,

வடபாதிமங்கலம்.

2) சந்தோஷ், வயது. 20/25,

த/பெ. ராதா,

மேலத்தெரு, மாயனூர்,

வடபாதிமங்கலம்.

3) திலீபன்சூர்யா, வயது. 26/25,

த/பெ. பாண்டியன்,

மெயின்ரோடு, வடபாதிமங்கலம். ... 1 முதல் 3 எதிரிகள்

| Sl. No. | Description | Remarks |
|---|---|---|
| 1. | The period of Remand of the Accused | 07.01.2025 |

<table>
<tr><td>2.</td><td>The Date of filing of Complaint / Final Report in the Court</td><td>16.07.2025</td></tr>
<tr><td>3.</td><td>The Date of Questioning of Accused under sections 240, 246 and 251 Cr.P.C.,</td><td>22.09.2025</td></tr>
<tr><td>4.</td><td>Miscellaneous petition and thier results including the results on challenge before superior court. Except routine petitioners like petition under sec 317 of the code.</td><td>N.A.</td></tr>
<tr><td>5.</td><td>Date of Examination in chief and cross</td><td><table><tr><td>PW</td><td>Chief</td><td>Cross</td></tr><tr><td>1</td><td>10.04.2026</td><td>10.04.2026</td></tr><tr><td>2</td><td>10.04.2026</td><td>10.04.2026</td></tr><tr><td>3</td><td>17.04.2026</td><td>17.04.2026</td></tr></table></td></tr>
<tr><td>6.</td><td>Date of Examination of the Accused under section 313 Cr.P.C.,</td><td>20.04.2026</td></tr>
<tr><td>7.</td><td>Details of Abscondence of an accused and his appearance/ production, as the case may be</td><td>N.A.</td></tr>
<tr><td>8.</td><td>Grant of stay by Superior Courts</td><td>N.A.</td></tr>
</table>

இவ்வழக்கு என் முன்பாக 20.04.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று (21.04.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கானது காவல் உதவி ஆய்வாளர், வடபாதிமங்கலம் காவல் நிலைய குற்ற எண். 03/2025-ன் கீழ் 1முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 118(1),115(2), 351(3) BNS ன் கீழான குற்றம் 1முதல் 3 எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 06.01.02025 ம் ததி மாலை சுமார் 17.00 மணிக்கு இவ்வழக்கின்வாதியான சிவா என்பவர் அரிசந்திராபுரம் வி.ஏ.ஓ அலுவலகம் அருகே தன்னுடைய செல்போனில் த னது நண்பருடன் பேசிக்கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரிகள் மூவரும் குடிபோதையில்

வாதியை பார்த்து இந்த தெருவுக்கு நீ என்ன பெரிய ஆளு புண்டையா என காமகுரோதமான வார்த்தைகளால் திட்டி, 1ம் எதிரி தான் வைத்திருந்த பீர் பாட்டிலால் வாதியின் தலையில் அடித்தும் 2 மற்றும் 3ம் எதிரி இருவரும் வாதியை கையால் அடித்து ஏற்கனவே காயம்பட்டிருந்த வாதியின் வலது கையை பிடித்து கீழே தள்ளிவிட்டு வாதிக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தி 1ம் எதிரி வாதியை பார்த்து கையில் இருந்த பீர்பாட்டிலைக் காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளதாக 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 மற்றும் 3ம் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழ் தண்டித்தக்கவர்கள் என்று வடபாதிமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. 1முதல் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230BNSS-ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. இவ்வழக்கின் இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருக்கிறார்கள் என்று அனுமானிப்பதற்கு போதிய ஆதாரம் இருக்கிறது என்பதால் 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 மற்றும் 3ம் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS -ன் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அக்குற்றச்சாட்டுகளை எதிரிகளுக்கு படித்துக் காட்டி விளக்கப்பட்ட போது எதிரிகள் தங்கள் மீது சாட்டப்பட்ட குற்றத்தை தாங்கள் செய்யவில்லை என்று மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரினார்கள். எனவே, தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. 1 முதல் 3 எதிரிகள் கோரியவாறு வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரையிலான சாட்சிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், புகார் கொடுத்த நபர் பட்டியல் சாட்சி1, கேள்விப்பட்ட பட்டியல் சாட்சி 4, ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்த கூடுதல் சாட்சியான காவல் உதவி ஆய்வாளர் திரு. உதயகுமார் ஆகியோர் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். பட்டியல் சாட்சிகள் 2, 3 மற்றும் 5 முதல் 10 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கறிஞரால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளனர்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. <u>விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு</u> -

i) கடந்த வருடம் ஜனவரி மாதம் ஒருநாள் இரவு 7.30 மணியளவில் அ.சா.1 அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு அருகே போன் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு இருட்டாக இருந்த நிலையில் அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத நபர் ஒரு இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்து அ.சா.1ன் மீது மோதிவிட்டு சென்றுள்ளார். அதில் அ.சா.1க்கு தலை மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டுள்ளது. அருகில் நின்றுக்கொண்டிருந்த முருகானந்தம், வீரமணி ஆகியோர்கள் ஓடிவந்துந்துள்ளனர். இந்த தகவலை கேள்விபட்ட அ.சா.1ன் அம்மா என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். அ.சா.1 ஒருவார காலம் சிகிச்சையிலிருந்த போது மேற்படி மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்தை பற்றிக் கூறியுள்ளார். அ.சா.1ன் மூலமாக புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii)கடந்த 07.01.2025-ம் தேதியன்று வடபாதிமங்கலம் பட்டிடியல் சாட்சி 9 காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வெங்கடசுப்ரமணியன் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அ.சா.1யை விசாரித்து அ.சா.ஆ-3 புகார்வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.3/2025 ல் BNS சட்டப் பிரிவுகள் 296(பி), 118(1),351(3) -ன் கீழ் எதிரிகளின் மீது அ.சா.ஆ-4 முதல் தகவல் அறிக்கையின் படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

பின்னர் பட்டியல் சாட்சி 10 உதவி ஆய்வாளர் திரு . இளங்கோவன் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி 5 கேசவன் மற்றும் பட்டியல் சாட்சி 6 செல்வா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகசர் மற்றும் அ.சா-ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் . சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் மூலங்குடி பேருந்து

நிறுத்தம் அருகே நின்றுக் கொண்டிருந்தவர்களை அன்றைதினமே 17.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

மேலும் இவ்வழக்கில் காயம் அடைந்த அ.சா.1க்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும், முதலுதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்த திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் பட்டியல் சாட்சி 7 திரு. அருண்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ-7 விபத்து பதிவேட்டினை பெற்று தாக்கல் செய்துள்ளார். மேலும், காயம்பட்ட அ.சா.1க்கு சிகிச்சையளித்த திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் பட்டியல் சாட்சி 8 திரு. சக்திபாலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ-8 மருத்துவ சட்டக்கருத்துரை பெற்று தாக்கல் செய்துள்ளார். மேற்படி மருத்துவரின் மருத்துவ சட்டக்கருத்துரையில் காயம்பட்ட நபர் தன்னிச்சையாக மருத்துவ மனையிலிருந்து சென்றுவிட்டபடியால் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என சான்று வழங்கியுள்ளார். மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடசுப்ரமணியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரிகளின் செய்கையானது BNS சட்டப்பிரிவுகள் 296(பி), 118(1),351(3)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 29.02.2025-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகக் கூறி அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் திரு. உதயகுமார் அவர்கள் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1 முதல் 3 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை 351(1)(b) BNSS-ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு கேட்கப்பட்டது.

9. <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு</u> :-

அரசு தரப்பில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் 1 முதல் 3 எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எதிரிகள் தான் குற்ற செயலில் ஈடுபட்டு அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டியும், 1ம் எதிரி அ.சா.1ன் தலையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2 மற்றும் 3ம் எதிரிகள் அ.சா.1 யை கீழே தள்ளிவிட்டு காயத்தை

ஏற்படுத்தியும், 1ம் எதிரி அ.சா.1யை பார்த்து குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்து குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமைந்துள்ளதாகக் கூறி எதிரிகளுக்கு தண்டனை வழங்குமாறும் எடுத்துரைத்தார்.

10. **<u>எதிரிகள் தரப்பு வாதம் பின்வருமாறு</u>** :-

எதிரிகள் தரப்பு வாதத்தின் போது இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் பிறழ் சாட்சியாகியுள்ளனர். அரசு தரப்பில் முன்னிருத்தப்பட்ட ஆவணங்களும் சாட்சிகளின் சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எதிரிகள் தான் குற்ற சம்பதவ்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

11. **<u>இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>**:-

1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 மற்றும் 3ம் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS -ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

12. **<u>தீர்வு</u>** :-

புகார் கொடுத்த நபரான அ.சா.1, கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2, மற்றும் புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்த அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக 1 முதல் 3 எதிரிகள்தான் குற்ற செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி என்று நிரூபணம் செய்ய வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

13) **புகார் கொடுத்த நபரான அ. சா. 1 தனது சாட்சியத்தில்** " சென்ற வருடம் ஜனவரி மாதம் ஒருநாள் இரவு 7.30 மணியளவில் நான் அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு அருகே போன் பேசிக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு இருட்டாக இருந்த நிலையில் **அடையாளம் தெரியாத, பெயர் தெரியாத நபர் ஒரு இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்து என் மீது மோதிவிட்டு சென்றுவிட்டார். அதில் எனக்கு தலை மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டது. அருகில் நின்றுக்கொண்டிருந்த முருகானந்தம், வீரமணி ஆகியோர்கள் ஓடிவந்தார்கள். இந்த தகவலை கேள்விபட்ட எனது அம்மா என்னை**

**108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் ஒருவார காலம் சிகிச்சையிலிருந்தேன்.** " என்று கூறி சாட்சியம் அளித்து **இந்திய சாட்சியை சட்டம் 154 பிரிவின் கீழ் பிறழ் சாட்சியாகியுள்ளார்.**

**14) கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் "** சென்ற வருடம் ஜனவரி மாதம் ஒருநாள் இரவு 7.30 மணியளவில் எனது மகன் அரிச்சந்திரபுரம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு அருகே போன் பேசிக்கொண்டிருந்தபோது இருசக்கர வாகனம் மோதி என் மகனுக்கு காயம் ஏற்பட்டதாக தகவல் கேள்விபட்டு எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்." என்று கூறி சாட்சியம் அளித்து **இந்திய சாட்சியை சட்டம் 154 பிரிவின் கீழ் பிறழ் சாட்சியாகியுள்ளார்.**

15) மேற்படி 1 முதல் 3 எதிரிகள் தான் சம்பவத்தின் போது அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, 1ம் எதிரி பீர்பாட்டிலால் அ.சா.1 யை தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவோ, 2 மற்றும் 3 எதிரிகள் அ.சா.1 யை கீழே தள்ளிவிட்டு காயத்தை ஏற்படுத்தியதாகவோ, 1ம் எதிரி பீர்பாட்டிலைக் காட்டி குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்ததாகவோ அரசு தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட காயமடைந்த மற்றும் புகார்தாரரான அ.சா.1 மற்றும் கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் அளிக்காமல் பிறழ் சாட்சியமாகியுள்ளனர்.

16) அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் பிறழ் சாட்சியாகியிருந்ததால், அரசு தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அவர்களின் சாட்சியம் அமையவில்லை. இந்த சூழ்நிலையில் மற்ற சாட்சிகளையும் விசாரிக்க வேண்டாமென்று குற்றத்துறை உதவி அரசு வழக்கறிஞர் அவர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டு, புலன் விசாரணை அதிகாரிக்காக காவல் ஆய்வாளர் திரு. உதயகுமார் அவர்கள் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

17) புகார்தாரரான அசா.1, மற்றும் 1 முதல் 3 எதிரிகள் ஆகியோர் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டதாகக் கூறி இந்நீதிமன்றத்தில் சமரச மனு 10.04.2026 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு அம்மனு M.P.No.5/2026 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு சமரசம் செய்ய இயலாத வழக்கு என்பதால் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

18) புலன் விசாரணை அதிகாரிக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்த அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருந்தாலும், அவரது சாட்சியத்தின் மூலம் வழக்கிற்கு பின்பு ஏற்பட்ட நிகழ்வுகளை ஊர்ஜிதம் செய்ய இயலுமே தவிர, வழக்கு சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் அவருடைய சாட்சியம் அமையவில்லை. எனவே அ.சா.3 ன் சாட்சியத்தினை மட்டும் வைத்து 1 முதல் 3 எதிரிகளை தண்டிக்க முற்படுவது இயற்கை நீதிக்கு முரண்பட்டதாகும். எனவே அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19)அரசுத்தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானோர் அரசுதரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ நாளில் 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, பீர்பாட்டிலால் தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, கீழே தள்ளிவிட்டு காயத்தை ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுதது குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களினால் 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 மற்றும் 3 ம் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS -ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இறுதியாக</u>**

1) இவ்வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை1 முதல் 3 எதிரிகளுக்கு வழங்கி எ 1ம் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழும், 2 மற்றும் 3 ம் எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2) BNS -ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து மேற்படி 1 முதல் 3 எதிரிகளை இவ்வழக்கில் இருந்து 271(1)BNSS -ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

2) 1 முதல் 3 எதிரிகள் கொடுத்த பிணை முறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

3) இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

4) வழக்கின் தன்மை, சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற் கொண்டு 395, 396 BNSS ன்கீழ் உத்தரவுகள் எதுவும் இல்லை.

| Particulars Under Rule 106 of Criminal Rules of Practice-2019 | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Description of the accused | | | | | | | Date of | | | | | | | | |
| Sl.No. | Name of the Police Station and Cr. No. | Name | Father Name | Occupation | Residency | Age | Occurance | Complaint | Apprehension | Commitment | Commencement of trial | Close of trial | Sentence of Order | Service Copy of Judgment an accused | Explanation of Delay |
| 1. | Vadapathimangalam 03/2025 | Vadiyalagan | Sellappa | Coolie | Andikula Street, Mayanur | 24/25 | 06.01.2025 | 07.01.2025 | 07.01.2025 | Not Applicable | 10.04.2026 | 20.04.2026 | Accquitted | 21.04.2026 | No Delay |
| 2. | Vadapathimangalam 03/2025 | Santhosh | Radha | Coolie | Mela Theru, Vadapathimangalam | 20/25 | 06.01.2025 | 07.01.2025 | 07.01.2025 | Not Applicable | 10.04.2026 | 20.04.2026 | Accquitted | 21.04.2026 | No Delay |
| 3. | Vadapathimangalam 03/2025 | Thilipansurya | Pandiyan | Coolie | Main Road, Vadapathimangalam | 26/25 | 06.01.2025 | 07.01.2025 | 07.01.2025 | Not Applicable | 10.04.2026 | 20.04.2026 | Accquitted | 21.04.2026 | No Delay |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர்எண்.2,

மன்னார்குடி.

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | சிவா | புகார்தாரர் (பிறழ்சாட்சி) |
| அ.சா.2 | லதா | கேள்விப்பட்ட சாட்சி(பிறழ் சாட்சி) |
| அ.சா.3 | திரு. உதயகுமார்<br>காவல் உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி (கூடுதல் சாட்சி) |

**2. அரசு தரப்பு சான்றவாணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.01.2025 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 10.04.2026 | சமரச மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | 07.01.2025 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ. 4 | 07.01.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 5 | 07.01.2025 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 07.01.2025 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ-7 | 07.01.2025 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ-8 | 07.01.2025 | மருத்துவ சட்டக் கருத்துரை |

3. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை.

4. அரசு தரப்பு சான்று பொருள்: இல்லை

ஒம்/- ஆ.சீதாலெட்சுமி,

நீதித்துறை நடுவர்எண்.2,

மன்னார்குடி.

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.

**குறிப்பு.**

1 இவ்வழக்கின் தீர்ப்பு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2 இவ்வழக்கின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

3 இவ்வழக்கு விசாரணையின் போது சாட்சிகள் மூன்று வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

4 கு.வி.மு.ச. 363(5) ஆவது பிரிவின்படி மனனார்குடி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.

**நகல் :-**

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.